[1974 சனவரி 25

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டிவிடென்ட் கொடுத்து இருக்கின்ற மில்கள் சௌத் இந்தியா, வடாற்காடு, சேலம் நூற்பு ஆலைகள். அதே போல் 1972-73-ல் சேலம், திருவில்லிப்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் கொடுத்து இருக்கிறோம்.

*170 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கைப் பகுதியில் நூற்பாலை ஒன்று துவங்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிவகங்கையில் தனியார் துறையில் நூற்பாலை ஒன்றைத் துவக்க மத்திய அரசு ஒரு உரிமம் வழங்கியுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த நூற்பாலை எப்போது துவங்கப்படும், இப்போது எந்த அளவில் ஆக்கப் பணி இருந்து கொண்டிருக்கிறது என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விரைவில் தொடங்கப்படும்.

விண்ணமங்கலம் தோல் பதனிடும் தொழிற்சாலை

*171 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டத்தில் விண்ணமங்கலம் அரசு தோல் பதனிடும் ஆலை இதுவரை ஈட்டிய லாபம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1971-72-ம் ஆண்டு முடிய நட்டம் போக கிடைத்த லாபம் ரூபாய் 1.14 இலட்சம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, அந்த விண்ணமங்கலம் தோல் பதனிடும் ஆலை நல்ல லாபம் பெற வாய்ப்பு பெற்று இருக்கிறது என்று கூறப்படுகிறது. அதை விரிவுபடுத்த செயற் குறிப்பு இருக்கிறதா ? மத்திய அரசாங்கம் அறிவித்து இருக்கிற தோல் கட்டுப்பாடு கொள்கையின் காரணமாக இது போன்ற கூட்டுறவுத் தொழிற்சாலைகளும், தனியாரும் மிகவும் பாதிக்கப்

1974 சனவரி 25]

பட்டு இருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அரசு இது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை என்ன? அவர்களுக்கு நல்ல முறையில் நடவடிக்கை எடுத்து நம்முடைய தோல் வெளிநாடு களுக்கும் சரளமான முறையில் அனுப்ப வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்தத் தோல் பதனிடும் கொள்கை குறித்து பிரதம அமைச்சரிடத்திலும், மற்ற அமைச்சர்களிடத்திலும் சொல்லியிருக்கிறோம். இரண்டு நாட்களுக்கு முன் நடைபெற்ற தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் கூட இது பற்றி விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. 'பினிஸ்ட் லெதர்' உற்பத்தி செய்து வெளிநாட்டிற்கு அனுப்ப வேண்டுமென்பது மத்திய அரசாங்கத்தின் கொள்கை. நாங்கள் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அந்தக் கொள்கை நிறை வேற்றப் படவேண்டுமானால் அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் மத்திய அரசாங்கம் செய்யவேண்டும். இப்படிப்பட்ட அடிப் படையில் கொண்டு வந்தது, ஒரு சில பெரிய முதலாளிகளுக்குச் சாதகமாகவும், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள்—குறிப் பாக முஸ்லீம் தொழிலாளர்கள்—வேலை செய்யும் ஸ்மால் டானர்ஸ் மத்திய அரசாங்கத்தின் கொள்கை காரணமாகப் பாதிக்கப்பட் டிருக்கிறார்கள். இது தவறு என்று சுட்டிக் காட்டினோம். அதற்கு யோசனையும் தெரிவித்தோம்.

இந்த ஸ்மால் டேனர்ஸ்க்கு பினிஷ்ட் கூட்ஸ் சென்டர்கள் அமைத்துத் தர மாநில அரசாங்கம் தயாராக இருக்கிறது. மத்திய அரசு இதற்கு நிதி உதவி அளிக்கவேண்டுமென்று யோசனை சொல்லி இருக்கிறோம். இந்த யோசனை நிறைவேற்றப்படும் வரை இந்த மாநிலத்தில் ஸ்மால் டேனர்ஸ் உற்பத்தி செய்யும் பினிஷ்ட் கூட்ஸ்ஸை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொறுப்பை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். அந்த உரிமை மாநில அரசுக்குத் தரவேண்டும். அப்படித் தருகிற அளவிற்கு பெரும் முதலாளிகளுக்குத் தருகிற சலுகைகள் நிறுத்தப்படவேண்டு மென்று நாம் யோசனை தெரிவித்தோம்.